OS.No.37/2024

PW–1 ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மேலாளர், சத்தியன்

த/பெ.

நாள். 03.07.2025

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1.பொதுவாக கடன் விண்ணப்பத்தை வாடிக்கையாளர் தான் நிரப்பி தருமாறு வங்கியில் இருந்த அறிவுறுத்துவோம். கடன் விண்ணப்பம் வெவ்வேறு கையெழுத்துக்களால் நிரப்பப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. வாடிக்கையாளருக்கு அதாவது இந்த பிரதிவாதிகளுக்கு ரூபாய்.2,30,000/– உச்சவரமாகத்தான் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டது. அதேபோல் கணக்குப்பாட்டியலில் அதாவது வாசாஆ–5 படி ரூபாய் 2,05,342/– தான் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னாலும் சரிதான் .

2. என்னுடைய வழக்குரையில் அசல் தொகையும் வட்டி தொகையும் தனித்தனியாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் வெறும் இரண்டு லட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் தான் உபயோகப்படுத்தி இருக்கும் நிலையில் தான் ரூபாய் 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு வழக்கு போட முடியாது என்று சொன்னால் சரி அல்ல. வாசாஆ–3 மற்றும் 4 ஆவணங்களில் உள்ள கையெழுத்து பிரதிவாதிகளின் கையெழுத்து அல்லா என்றும் அவை மற்ற ஆவணங்களில் உள்ள பிரதிவாதி கையெழுத்துக்களுடன் ஒத்துப் போகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3.பிரதிவாதிகளின் கையெழுத்து ஒத்துப்போகாத நிலையில் பிரதிவாதிகள் தான் கையெழுத்து செய்தார்கள் என்று நான் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு இந்த வழக்கில் கடனை திரும்ப செலுத்த அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல அப்படி எந்த அறிவிப்பும் வழக்கில் ஆவண படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4.வாசாஆ–3 மற்றும் 4 ஆவணங்களில் உள்ள கையெழுத்து பிரதிவாதிகளுடையது இல்லை என்ற நிலையில் இந்த வழக்கை தொடுக்க கால வரையறை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கில் சொல்லி இருக்கும் கடன் தொகை தவறானது என்றும் அதனால் எனக்கு வழக்கில் நாங்கள் கோரி ஏற்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி அல்ல.

5.வழக்காவணங்கள் தவறாக ஜோடிக்கப்பட்டவை என்றும் அவற்றின் அடிப்படையில் வழக்கு நிலை என்று சொன்னால் சரி அல்ல. வழக்கு கணக்கு பட்டியலில் கண்டுள்ள தொகைகள் அனைத்தும் தவறானவை என்ற போது இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல. என்று சொன்னால் சரி அல்ல தள்ளுபடி செயல்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

Digitally signed by V.SREE VIDYA
DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.